# தூத்துக்குடி மாநகராட்சி

## அவசரக் கூட்டப் பொருள்

2023ம் ஆண்டு ஜீன் மாதம் 30ம் நாள் வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3(2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| மாமன்ற கூட்ட தேதி | மாமன்ற தீர்மானம் | தீர்மானம் |
|---|---|---|
| 30.06.2023 | 1. இம்மாநகராட்சி மைய மற்றும் மண்டல அலுவலகங்களில் நடைபெறும் அலுவலக பணிகள் முற்றிலும் கணினி மயமாகிவிட்டதால், குடிநீர் (கேட்பு எழுப்புதல்) மேற்கொள்ளவும், மற்றும் சொத்து வரி பொது சீராய்வு பணியினை கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை விரைந்து முடிக்கவும் போதிய பணியாளர்கள் மாநகராட்சியில் இல்லாததால், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை 2022– 2023ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் நகர்புற வாழ்வாதார மையம் (City livelihood centre) மூலம் கணினி இயக்குபவர்கள் (Data Entry Operator) கணினி பிரிவு மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு தற்காலிக ஊதியம் அடிப்படையில் 7கணினி இயக்குபவர்கள், மாமன்ற தீர்மான எண் 304, நாள்.31.03.2023ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் வடக்கு மண்டலத்திற்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குதல் பணி மற்றும் இதர இனங்களினை, உடனுக்குடன் கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிக்கு, கூடுதலாக 1 நபரை கணினி இயக்குபவராக 17.05.2023 முதல் 31.03.2024 வரை தினக்கூலி அடிப்படையில் நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>2022 – 2023ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.573/–, மேற்கண்ட கணினி இயக்குபவர்களாக பணிபுரியும் மொத்தம் 8 நபர்களுக்கு, மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான உத்தேச செலவினத்தொகை ஆண்டிற்கு ரூ.18.50 இலட்சம் மாநகராட்சியின் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள | 328) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது |

மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ5/1576/2018

2. இம்மாநகராட்சி மேற்கு மண்டலம், சங்கரநாராயணன் பூங்கா, மில்லர்புரம் OHT, மற்றும் பாளையங்கோட்டை ரோடு முதல் மையவாடியின் எரிவாயு தகன மேடை பகுதிகளில் சேகரமாகியுள்ள பழைய இரும்பு பொருட்களை அப்புறப்படுத்தும் பணிக்கு 30.05.2023 அன்று ஏலம் நடத்தப்பட்டு, அதில் 2 நபர்கள் கலந்து கொண்டனர்.

| S. No | Material | Quantity | AS Per Estimate | | As per Tender Auction | | As per Tender Auction | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Thiru. G. Partiban | | M/s. John Constructions | |
| | | | Rate | Amount | Rate | Amount | Rate | Amount |
| 1 | MS Steel | 14950.00 | 30.00 | 448500.00 | 31.50 | 470925.00 | 31.00 | 463450.00 |
| 2 | Plastic | 800.00 | 20.00 | 16000.00 | 20.00 | 16000.00 | 19.50 | 15600.00 |
| 3 | Wood | 1.15 | 6701.19 | 7719.77 | 6720.00 | 7741.44 | 6710.00 | 7729.92 |
| | **Basic Total Amount** | | | **472219.77** | | **494666.44** | | **486779.92** |
| | | | | | | -22446.67 | | -14560.15 |
| | | | | | | -4.75% | | -3.08% |

மேற்கண்ட ஏலத்தில் கலந்து கொண்ட திரு.G.பார்திபன் என்பவர், பழைய இரும்பு பொருட்களை அப்புறப்படுத்தும் பணிக்கு மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக ரூ.22,447/– ஏலக்கேள்வி கோரியுள்ளார். மேற்கண்ட ஏலக்கேள்வி தொகை ரூ.4,94,653/–ஐ (GST 18% நீங்கலாக) மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

329) அலுவலகக் குறிப்பு
1.அங்கீகரிக்கப் பட்டது
2. அங்கீகரிக்கப் பட்டது

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு :<br>1. பழைய இரும்பு பொருட்களை அப்புறப்படுத்தும் பணிக்கு திரு.G.பார்திபன் என்பவரின் உயர்ந்த ஏலக்கேள்வித் தொகை ரூ.4,94,653—ஐ, (GST 18% நீங்கலாக) மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு வேலை உத்திரவு வழங்குவதற்கு மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>இ5/2097/2023 | |
| | **3.** நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (தோ்தல்) துறை, அரசாணை (நிலை) எண்.92, நாள்.24.06.2022ல் உள்ளாட்சி நிர்வாகத்தை வலுப்படுத்தவும், நகர்ப்புற உள்ளாட்சி செயல்பாடுகளில் பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் திட்டம், வளர்ச்சிப்பணிகள் செயல்படுத்தவும் உள்ளாட்சி அமைப்புகளில் ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு வார்டு குழு அமைத்து அந்தந்த வார்டு மாமன்ற உறுப்பினர் அந்த வார்டு குழு தலைவராக செயல்படுவதற்கும், அந்த வார்டில் வாக்குரிமை பெற்ற ஒவ்வொரு வார்டு பகுதியில் ஒரு நபரை வார்டுகுழு உறுப்பினர்களாக செயல்பட மாமன்றம் மூலம் பரிந்துரை செய்து நியமனம் செய்திடவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கி உத்தரவிட்டுள்ளதை தொடர்ந்து இம்மாமன்றத் தீர்மானம் எண்.236, நாள். 28.10.2022 ல் பகுதி சபா உறுப்பினர்கள் நியமனம் செய்து அனுமதித்துள்ளது.<br>நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, அரசாணை (நிலை) எண்.93, நாள்.24.06.2022ல் மேற்கண்ட பகுதி சபா கூட்டத்தினை மூன்று மாதத்திற்கு ஒரு முறை கூட்டுவதற்கும் திட்டப்பணிகள் மற்றும் வளர்ச்சிப்பணிகள் குறித்த கூட்டப்பொருள் (Agenda) தயார் செய்ய ஏதுவாக கூட்டச்செயலாளர் ஒருவரை உதவியாளர் நிலையில் நியமித்திடவும் ஆணையிடப்பட்டு அதன்பேரில் ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு கூட்டச்செயலாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு 01.11.2022 அன்று உள்ளாட்சி தினத்தினை முன்னிட்டு முதல் கூட்டம் நடைபெற்றது.<br>இந்நிலையில் மேற்கண்ட பகுதி சபா | 330) அலுவலகக் குறிப்பு பதிவு செய்யப்பட்டது |

கூட்டத்தினை ஒவ்வொரு ஆண்டும் நான்கு கூட்டங்கள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள தேதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் 1998 பிரிவு எண்49 எப்,49எச் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் 2023 விதி எண்180ன்படி கூட்டுவதற்கு நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, அரசாணை(நிலை) எண்.64, நாள்.22.05.2023 ல் ஆணையிட்டுள்ளது.

பகுதி சபா கூட்டம் நடத்துவதற்கான தேதிகள் விபரம்

| வ. எண் | கூட்டம் மாதகாலம் | தேதி | கூட்டம் கூட்டுவதற்கான முக்கிய தினங்கள் |
|---|---|---|---|
| 1. | ஜனவரி முதல் மார்ச் | ஜனவரி 25ஆம் தேதி | தேசிய வாக்காளர் தினம் |
| 2. | ஏப்ரல் முதல் ஜீன் | ஏப்ரல் 14ஆம் தேதி | டாக்டர் அம்பேத்கர் பிறந்த தினம் |
| 3. | ஜீலை முதல் செப்டம்பர் | செப்டம்பர்15 ஆம் தேதி | பேரறிஞர் அண்ணா பிறந்த தினம் |
| 4. | அக்டோபர் முதல் டிசம்பர் | டிசம்பர்10ஆம் தேதி | மனித உரிமைகள் தினம் |

மேலே பட்டியலில் குறிப்பிடப்பட்ட தேதிகளில் பகுதிசபா கூட்டம் நடத்திடவும், அந்தந்த உள்ளாட்சி ஆணையர்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே பகுதிசபா கூட்டத்தினை மேற்காணும் பட்டியலில் குறிப்பிடப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த தினங்களில் நடத்திட வரப்பெற்ற அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்.

சி1 / 5199 /2022

4. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் 1. திரு.வி.க.நகர் 2. அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, 3.மில்லர்புரம், 4. தந்தி ஆபிஸ் அருகில், 5. சப்கலெக்டர் ஆபிஸ், 6. ஜிம்கானா கிளப் அருகில், 7. அமெரிக்கன் ஆஸ்பத்திரி அருகில், 8. ஏ.பி.சி

331) அலுவலகக் குறிப்பு
1.அனுமதிக்கப் பட்டது
2.அங்கீகரிக்கப் பட்டது

<table>
<tr><td></td><td>கல்லூரி அருகில், 9. காந்தி சிலை அருகில் ஆகிய 9 பேருந்து நிறுத்தம் நிழற்கூரைகளில் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ள LED திரையில் மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு விளம்பரம் மேற்கொள்ளும் குத்தகை உரிமத்திற்கு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கைக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: 1. மாமன்றம் அனுதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ஆ16/1936/2022</td><td></td></tr>
<tr><td></td><td>5. தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட ஜெயராஜ் ரோட்டில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள பலஅடுக்கு வாகன நிறுத்தும் இடம் பயன்பாட்டு நிலைக்கு கொண்டு வரும் விதமாகவும், மாநகராட்சி வருவாயைப் பெருக்கும் வகையிலும், மேற்படி இடத்தில் நிறுத்தம் செய்யப்படும் வாகனங்களுக்கு கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்திட மாமன்ற தீர்மானம் எண்.117 நாள்:30.05.2022ன்படி மாமன்றத்தின் ஒப்புதல் வழங்கப்பட்டது.<br><br><table><tr><th>வ.எண்.</th><th>வாகனம்</th><th>கால அளவு</th><th>கட்டணம் தொகை ரூ.</th></tr><tr><td>1</td><td>இருசக்கர வாகனம்</td><td>02 மணி நேரத்திற்கு</td><td>5/–</td></tr><tr><td>2</td><td>நான்கு சக்கர வாகனம்</td><td>02 மணி நேரத்திற்கு</td><td>10/–</td></tr></table><br>அதனை தொடர்ந்து மேற்படி பல அடுக்கு வாகன நிறுத்தும் இடம் மற்றும் வணிக வளாகம் 26.05.2023 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரும் வகையில் சோதனை முறையில் வாகனங்கள் அனுமதிக்கப்பட்ட நிலையில் வாகன நிறுத்தத்தின் கால அளவை நீட்டித்து கட்டணத்தை நிர்ணயம் செய்திடுமாறு பொதுமக்கள், வியாபாரிகள் சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து கோரிக்கைகள் எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி கோரிக்கைகள் பரிசீலித்ததில் கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.</td><td>332) அலுவலகக் குறிப்பு<br>1.அனுமதிக்கப் பட்டது<br>2.அங்கீகரிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்.</th><th>வாகனம்</th><th>கட்டணத் தொகை (6 மணி நேரத்திற்கு) ரூ.</th><th>கட்டணத் தொகை (ஒரு மாதத்திற்கு) ரூ.</th></tr>
<tr><td>1</td><td>இருசக்கர வாகனம்</td><td>5/–</td><td>500/–</td></tr>
<tr><td>2</td><td>நான்கு சக்கர வாகனம்</td><td>10/–</td><td>1000/–</td></tr>
</table>
எனவே வாகனம் நிறுத்தம் கட்டணம் பொதுநலன் கருதி பொது சேவையின் அடிப்படையில் காலஅளவினை நீட்டித்து மேற்கண்டவாறு வாகன கட்டணங்களை நிர்ணயம் செய்து வசூலிப்பதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலக குறிப்பு: 1. எனவே மேற்படி மேற்கண்டவாறு வாகன நிறுத்தம் கால அளவு நீடித்து நிர்ணயம் செய்து வசூலித்திட மாமன்றம் அனுதிக்கலாம்.<br>
2.அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
அ16/4263/2021
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>6. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட தாமோதரர் நகர் மெயின் ரோடு பகுதியில் ரூ.63.00 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்க தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர், அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் இ1/4984/2022, நாள் 10.01.2023ன் படி நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது.<br>
மேற்படி தார் சாலை அமைக்கும் பணியில் 825 மீட்டருக்கு தார் தளம் அமைக்கவும், அதில் 530 மீட்டருக்கு WET Mix தளம் அமைக்கவும் மீதமுள்ள 295 மீட்டருக்கு தார்தளம் புதுப்பித்தல் பணி மேற்கொள்ளவும் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாதாளச்சாக்கடை வீட்டிணைப்பு வழங்ககும் பணி மற்றும் DMA Zonation பணிகளின் காரணமாக சாலை தோண்டப்பட்டு சாலை சேதமடைந்துள்ளதால் மீதமுள்ள 295 மீட்டருக்கு தார்தளம் புதுப்பித்தல் பணி மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது. எனவே மீதமுள்ள 295 மீட்டரில் பள்ளம் ஏற்பட்டுள்ள சாலை முழுவதும் WET Mix தளம் அமைத்து மேற்படி சாலை பணியினை செய்து முடிக்க திருத்திய மதிப்பீடு ரூ.68.70 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.</td>
<td>333) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்படி சாலை அமைக்கும் பணிக்கு ஏற்கனவே ரூ.63.00 இலட்சம் 15வது நிதிக்குழு 2022–2023ம் ஆண்டுக்கான Tied Grant நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது சாலை பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு கூடுதலாக வரும் தொகை ரூ.5.70 இலட்சத்தினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்<br>இ1/4984/2022 | |
| | 7. தூத்துக்குடி மாநகராட்சியில் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் (2023–2024)ன் கீழ் ரூ.2175.00 இலட்சம் மதிப்பீட்டில் 47.587 கி.மீ நீளத்திற்கு 237 தார் சாலைகள் அமைக்க சென்னை நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 4548/2023/SS1, நாள் 31.05.2023ன் படி நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.<br>மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்<br>இ1/02594/2023 | 334) அலுவலகக் குறிப்பு பதிவு செய்யப்பட்டது |
| | 8. தூத்துக்குடி மாநகராட்சியில் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் வகையில் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (2023–2024)ன் கீழ் ரூ.484.00 இலட்சம் மதிப்பீட்டில் 13.25 கி.மீ நீளத்திற்கு 63 தார் சாலைகள் அமைக்க நகர்ப்புற சாலைகள் திட்டத்தின் 5வது திட்ட ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழு ஆய்வுக்கூட்ட குறிப்பு நாள் 29.05.2023ன் படி ஒப்புதல் வழங்கியுள்ளது.<br>மேற்படி பணிகளுக்கு ஒப்புதல் பெறப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்<br>இ1/02782/2023 | 335) அலுவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது |
| | 9. தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு அச்சுறுத்தலாகவும் போக்குவரத்திற்கு இடையூறாகவும் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணி மாமன்ற அனுமதி பெற்று ஏற்கனவே நடந்து முடிவடைந்துள்ளது. இந்த நிலையில் மேலும் இப்பணியினை தீவிரமாக மேற்கொண்டு மாநகரில் தெரு நாய்களை கட்டுப்படுத்த தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை | 336)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2ம் அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணியினை செய்வதற்கு அனுமதியும், மேலும் G.O.No:181, நாள்:05.04.2013 உத்தரவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு நாய் ஒன்றுக்கு ரூ.700/– வீதம் 2000 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் திட்டம் மாமன்ற அனுமதி பெற்று 2000 நாய்களுக்கு மட்டும் கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வந்தது இந்நிலையில் பொது நலன் கருதி கூடுதலாக பிடிக்கப்பட்ட 490 தெரு நாய்களுக்கு நாய் ஒன்றுக்கு ரூ.700/– வீதம் 490 தெரு நாய்களுக்கு தொகை ரூ.3,43,000/– வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>தற்பொழுது அரசு செயலாளர் அவர்களின் G.O.(4D) No.01 நாள்: 17.03.2023 உத்தரவில் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணிகளை (ABC/ARV) மேற்கொள்ளவும் மூன்று நாட்கள் பராமரிப்பதற்கும் நாய் ஒன்றிற்கு ரூ.1650/– வீதம் இப்பணியினை மேற்கொள்ள நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணிகளை (ABC/ARV) செய்வதற்கு நாய் ஒன்றிற்கு ரூ.1650/– வீதம் வழங்கவும் 01.07.2023 முதல் மாதந்தோறும் 500 தெரு நாய்கள் வீதம் 6 மாதத்திற்கு மொத்தம் 3000 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணிகளை (ABC/ARV) மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.49,50,000/– தொகைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. 01.07.2023 முதல் மாதந்தோறும் 500 தெரு நாய்கள் வீதம் 6 மாதத்திற்கு மொத்தம் 3000 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணிகளை (ABC/ARV) மேற்கொள்ளவும் நாய் ஒன்றிற்கு ரூ.1650/– வீதம் 3000 தெருநாய்களுக்கு உத்தேச செலவினத் தொகை ரூ.49,50,000/– தொகைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையை காட்டிலும் கூடுதலாக 490 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டதற்கான தொகை (490 X 700) ரூ.3,43,000/– ஐ சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு தொகை வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்3/11648/201 | |

10. தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் **M/s.Whale Enterprise pvt ltd** என்பவர் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு முன் வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டுள்ளார்கள்.

| L. NO | NAME OF WORK | ESTIMAT NO | PAYMENT DATE | AMOUNT EMI |
|---|---|---|---|---|
| 1. | Refurbishment of Old Chassis TN 69 AP 0177 | 18/19-20 | 10.08.2019 | 17,300/- |
| | TOTAL AMOUNT | | | **17,300/-** |

மேற்படி பட்டியலில் கலந்து கொண்டுள்ள பணிக்கு **11.10.2019** ஆணையர் அவர்களின் அனுமதியின் பேரில் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் காரணமாக அன்னாருக்கு பணி ஒதுக்கிடு செய்யப்படவில்லை மேலும் அன்னார் செலுத்திய முன்வைப்பு தொகை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் **M/s.Whale Enterprise pvt ltd** என்பவர் மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு செலுத்திய முன் வைப்பு தொகையை திரும்ப வழங்க கேட்டு விண்ணப்பித்துள்ளார், அன்னார் செலுத்திய மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணிக்கு செலுத்திய முன் வைப்பு தொகை ரூ.**17,300/-**காலங்கடந்த வைப்பு தொகையாக உள்ளதால் அன்னாருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : **M/s.Whale Enterprise pvt ltd** ஒப்பந்ததாரர் என்பவர் பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு முன் வைப்பு தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டுள்ளதில் **11.10.2019** ஆணையர் அவர்களின் அனுமதியின் பேரில் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது எனவே தொழில்நுட்ப பிரிவு அறிக்கையை ஏற்று காலங்கடந்த வைப்பு தொகை கணக்கில் கொண்டு செல்லப்பட்ட வைப்பு தொகை ரூ.**17,300/-**திரும்ப வழங்கலாம்.

இ5/0532/2023

337) அலுவலகக் குறிப்பின்படி திரும்ப வழங்க அனுமதிக்கப் பட்டது

11. தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் **M/s.SriDevi Construction&Labour contractor** என்பவர் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு முன் வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டுள்ளார்கள்.

| L. O | NAME OF WORK | ESTI | PAYMENT | AMOUNT |
|---|---|---|---|---|

338) அலுவலகக் குறிப்பின்படி திரும் வழங்க அனுமதிக்கப்பட் டது

| | | MATE NO | DATE | EMD |
|---|---|---|---|---|
| 1. | Construction of drain with culvert at Toovipuram sankara narayanan park. | 331/18-19 | 28.02.2019 | 5,200/- |
| 2. | Cleaning and removing the seemaikaruvelam tree inside the seena vaana kulam. | 157/18-19 | 22.10.2018 | 1,500/- |
| | TOTAL AMOUNT | | | **6,700/-** |

மேற்படி பட்டியலில் கலந்து கொண்டுள்ள பணிகளுக்கு அதிக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் அன்னாருக்கு பணி ஒதுக்கிடு செய்யப்படவில்லை மேலும் அன்னார் செலுத்திய முன்வைப்பு தொகை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் M/s.SriDevi Construction&Labour contractor என்பவர் மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு செலுத்திய முன் வைப்பு தொகையை திரும்ப வழங்க கேட்டு விண்ணப்பித்துள்ளார், அன்னார் செலுத்திய மேற்படி பட்டியலில் கண்டுள்ள அனைத்து பணிகளுக்கும் செலுத்திய முன் வைப்பு தொகை ரூ.**6,700/-**காலங்கடந்த வைப்பு தொகையாக உள்ளதால் அன்னாருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

M/s.SriDevi Construction&Labour contractor ஒப்பந்ததாரர் என்பவர் பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு முன் வைப்பு தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டுள்ளதில் கூடுதல் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் பணிகள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என தொழில்நுட்ப பிரிவு அறிக்கையை ஏற்று காலங்கடந்த வைப்பு தொகை கணக்கில் கொண்டு செல்லப்பட்ட வைப்பு தொகை ரூ.**6,700/-**திரும்ப வழங்கலாம்.

இ5/02096/2022

| | | |
|---|---|---|
| | **12.** தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர் திரு.**முருகன்** என்பவர் கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு முன் வைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டுள்ளார்கள். | **339)** அலுவலகக் குறிப்பின்படி திரும்ப வழங்க அனுமதிக்கப் பட்டது |

| L. O | NAME OF WORK | ESTIMA E NO | PAYMEN T DATE | AMOUN T EMD |
|---|---|---|---|---|
| 1. | Construction of Culvert at Subbiah Puram 3rd street Junction | 246/18-19 | 27.12.2018 | 2,150/- |
| 2. | Dismantling of damaged store Room roof and providing of MS truss and pre painted galvanized sheet roof MS`A' ladder arrangements for sytex at Rajaji park Amma Unavagam. | 164/18-19 | 31.10.2018 | 1,800/- |
| 3. | Construction of Compound wall raising at Cruzpuram OHT | 198/18-19 | 27.12.2018 | 2,700/- |
| | TOTAL AMOUNT | | | **6,650/-** |

மேற்படி பட்டியலில் கலந்து கொண்டுள்ள பணிகளுக்கு அதிக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் அன்னாருக்கு பணி ஒதுக்கிடு செய்யப்படவில்லை மேலும் அன்னார் செலுத்திய முன்வைப்பு தொகை மூன்று வருடத்திற்குள் திரும்ப பெறாததால் அத்தொகை காலங்கடந்த வைப்பு தொகைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் திரு.முருகன் என்பவர் மேற்படி பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு செலுத்திய முன் வைப்பு தொகையை திரும்ப வழங்க கேட்டு விண்ணபித்துள்ளார், அன்னார் செலுத்திய மேற்படி பட்டியலில் கண்டுள்ள அனைத்து பணிகளுக்கும் செலுத்திய முன் வைப்பு தொகை ரூ.**6,650**/-காலங்கடந்த வைப்பு தொகையாக உள்ளதால் அன்னாருக்கு திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

அலுவலக குறிப்பு : திரு.முருகன் ஒப்பந்ததாரர் என்பவர் பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு முன் வைப்பு தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டுள்ளதில் கூடுதல் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதால் பணிகள் ஒதுக்கிடு செய்யப்படவில்லை என தொழில்நுட்ப பிரிவு அறிக்கையை ஏற்று காலங்கடந்த வைப்பு தொகை கணக்கில் கொண்டு செல்லப்பட்ட வைப்பு தொகை ரூ.**6,650**/-திரும்ப வழங்கலாம்.

**இ5/02094/2022**

| | | |
|---|---|---|
| | 13. தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட கிரேட் காட்டன் சாலை, பார்டர் பஜாரில் செயல்பட்டு வந்த 30 தொடர் வணிக கடைகள் அகற்றப்பட்டு தற்போது சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் இரும்பு தகடுகளால் முதல் தளத்துடன் 31 கடைகள் அமைக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் இம்மாநகராட்சி வருவாயைப் பெருக்கும் வகையில் மேற்படி கடைகளை குத்தகை உரிமம் வழங்கும் பொருட்டு ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கைகள் மேற்கொண்டதனைத் தொடர்ந்து, மேற்படி புதிய கடைகள் அமைக்கப்படுவதற்கு முன்பு பார்டர் பஜாரில் வியாபாரம் செய்து வந்த 30 கடைகளுக்குரிய உரிமையாளர்களின் தொடர் கோரிக்கையில், தாங்கள் சுமார் 50 வருடங்களுக்கு மேல் வியாபாரம் செய்து வந்த நிலையில் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் புதிய கடைகள் அமைக்கும் பணிகள் தொடங்குவதற்கு ஏதுவாக காலி செய்திட அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட நிலையில், வியாபாரிகள் சங்கத்தின் மூலம் கலந்து ஆலோசிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாநகராட்சி நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்கிடும் விதமாக மேற்படி 30 கடைகளும் காலி செய்யப்பட்டு மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது புதிய கடைகள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதால் மேற்படி கடைகளை ஏற்கனவே வியாபாரம் செய்து வந்த 30 கடைதாரர்களுக்கு வழங்கிட ஆவண செய்யுமாறும், மேலும் கடந்த இரண்டு வருடங்களாக வியாபாரம் செய்திட வழியின்றி தற்போது பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில், தங்களின் பொருளாதாரத்தை உயர்த்திடும் பொருட்டும், வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையில் உதவி செய்திடுமாறும் தனிப்பட்ட நபர்கள் மற்றும் வணிக சங்க பிரதிநிதிகளிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளது.<br><br>எனவே மேற்படி புதியதாக அமைக்கப்பட்டுள்ள 31 கடைகளிலும் ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளியில் ஏற்கனவே கடை வைத்திருந்த 30 கடைக்காரார்களுக்கு முன்னுரிமை அளித்து மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட மாத வாடகைக்கும் கூடுதலாக உயர்ந்தபட்ச கேள்வியை அடிப்படையாக கொண்டு காப்பு வைப்புத்தொகை மற்றும் முன்பண வைப்புத்தொகை ஆகியவற்றை செலுத்திய பின் உரிமம் வழங்க நடவடிக்கை எடுப்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | 340) முந்தைய கடை உரிமதாரர்களின் முன்னுரிமை மற்றும் மாநகராட்சியில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையினை காட்டிலும் கூடுதலாக உயர்ந்தபட்ச ஏல/ஒப்பந்த புள்ளி தொகையினை அடிப்படையாக கொண்டு உரிமம் வழங்கிட அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு: மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br><br>அ16/917/2021 | |
| | 14. சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் கீழரதவீதி தொடர்ச்சியில் கட்டப்பட்டு வரும் கூட்டரங்கம் பணியானது விரைவில் நிறைவு பெற உள்ளது. எனவே மேற்படி கூட்டரங்கினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதை முன்னிட்டு கூட்டரங்கத்தை ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்த வாடகை அடிப்படையில் (நாள் வாடகை) மற்றும் முன்பண வைப்புத் தொகை நிர்ணயம் செய்து மாநகராட்சி மூலம் முன்பதிவு மற்றும் பணியாளர்கள் நியமனம் செய்து மாநகராட்சியே கட்டணம் வசூல் செய்திடவும், பராமரிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : 1.மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>2.மேற்படி கூட்டரங்கம் தொடர்பாக விளம்பர செலவு, பராமரிப்பு செலவு மற்றும் பணியாளர்களுக்கான ஊதியங்களை பொது நிதியில் செலவிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ16/2942/2023 | 341)அலுவலகக் குறிப்பு<br>1.மாநகராட்சி மூலம் கட்டணம் வசூல் செய்து பராமரித்திட அனுமதிக்கப் பட்டது.<br>2.அனுமதிக்கப் பட்டது |
| | 15. தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட பழைய பேருந்து நிலையம் (அண்ணா பேருந்து நிலையம்) இடிக்கப்பட்டு தற்போது சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் 58.67 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டு வரும் நிலையில் மேற்படி பணியானது விரைவில் நிறைவு பெறவுள்ளது. எனவே பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதை முன்னிட்டு இம்மாநகராட்சி வருவாயை பெருக்கும் வகையில் மேற்படி பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாக கடைகளை ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கைகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : 1. மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். | 342)அலுவலக் குறிப்பு<br>1.ஏலம் (ம) ஒப்பந்த புள்ளி கோர அனுமதிக்கப் பட்டது<br>2. அனுமதிக்கப் பட்டது |

| | | |
|---|---|---|
| | 2. மேற்படி ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு தொடர்பான விளம்பர செலவினங்களுக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>அ16/2943/2023 | |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்:30**.06.2023**

மேயர்
தூத்துக்குடி மாநகராட்சி